TNRM110000792020



**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**முன்னிலை : திரு.C.மோகன்ராம், M.A. B.L.,**

**அமர்வு நீதிபதி,**
**பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம், இராமநாதபுரம். (மு.கூ.பொ)**
**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16–ஆம் நாள் திங்கள்கிழமை**
**சிறப்பு அமர்வு வழக்கு எண்.46/2019**
**(C.N.R.No.TNRM11-000079-2020)**

**திருவாடானை காவல்நிலைய குற்ற எண்.127/2019**

| | | |
|---|---|---|
| குற்றமுறையிடுபவர் | : | தமிழ்நாடு அரசுக்காக<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>திருவாடானை உட்கோட்டம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| எதிரியின் பெயர், வயது, தகப்பனார் பெயர் மற்றும் முகவரி | : | **பெருமாள்**, வயது 29/2019,<br>த/பெ. முருகன்,<br>கோவிந்தமங்களம்,<br>ஆர்.எஸ்.மங்களம் தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| Date of Occurrence | : | 28.06.2019 |
| Date of filing charge sheet | : | 26.08.2019 |
| Date of taken on file | : | 30.08.2019 |
| Date of first appearance of the accused | : | 05.09.2019 |
| Date of last hearing | : | 12.03.2019 |
| Closure of Trial | : | 07.03.2026 |
| Date when the defence argument was closed | : | 12.03.2026 |
| Date of Judgment | : | 16.03.2026 |
| **மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C.No. 814/2020/ RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.–யின்படி** | | |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:47:59 +0530

TNRM110000792020



**CASE SUMMARY:–**

| **S. No.** | **Description** | : | **Date** | | |
|---|---|---|---|---|---|
| i) | Date of remand of the accused : | : | 10.07.2019 | | |
| ii) | Date of the filing of the complaint/Final Report in the Court. | : | 30.08.2019 | | |
| iii) | Dare of committal of the case to this Court of Sessions | : | Nil | | |
| iv) | Date of questioning of the Accused u/s 228/ 240/ 246/ 251 of the Code of Criminal Procedure, 1973 as the case may be | : | 06.09.2019 | | |
| v) | Filing of the miscellaneous petitions including the results on challenge before Superior Courts, except routine petitions u/s 317 of the Code. | : | NIL | | |
| vi) | Date of examination in chief and cross examination of witnesses. | : | Witnesses | Chief Examination | Cross Examination |
| | | | P.W.1 | 22.10.2019 | 07.08.2025 |
| | | | P.W.2 | 22.10.2019 | 07.08.2025 |
| | | | P.W.3 | 19.06.2024 | 19.06.2024 |
| | | | P.W.4 | 06.08.2024 | 06.08.2024 |
| | | | P.W.5 | 06.08.2024 | 06.08.2024 |
| | | | P.W.6 | 06.08.2024 | 06.08.2024 |
| | | | P.W.7 | 06.01.2026 | 06.01.2026 |
| | | | P.W.8 | 09.02.2026 | 09.02.2026 |

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:04 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | PW.9 | 07.03.2026 | 07.03.2026 |
| vii) | Date of enquiry of the accused u/s 313(1) (b) of Cr.P.C. | : | 12.03.2026 | | |
| viii) | Details of absconding of the accused and his appearance/production, as the case may be: | : | Abscondance<br><br>-- | Production<br><br>--- | |
| ix) | Grant of stay by superior courts and the results thereof: | : | NIL | | |

**வனையப்பட்ட குற்றச்சாட்டு**

| | | |
|---|---|---|
| **1 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரை ஆபாசமாகப் பேசிய குற்றத்திற்காக இதச பிரிவு 294(பி)-ன் கீழான குற்றச்சாட்டு. |
| **2 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாக இதச பிரிவு 506(1)-ன் கீழான குற்றச்சாட்டு. |
| **3 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரைப் பார்த்து சாதியைச் சொல்லி திட்டி அவமானப்படுத்திய குற்றத்திற்காக பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(1)(r)-ன் கீழான குற்றச்சாட்டு. |
| **4 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரின் மனைவியைப் பார்த்து ஆபாசமாகப் பேசிய குற்றத்திற்காக இதச பிரிவு 294(பி)-ன் கீழான குற்றச்சாட்டு. |
| **5 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரின் மனைவியைப் பார்த்து கொலைமிரட்டல் விடுத்ததாக இதச பிரிவு 506(1)-ன் கீழான குற்றச்சாட்டு. |
| **6 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரின் மனைவியைப் பார்த்து ஊரைவிட்டு ஓடிப்போய்விடுங்கடி என பேசிய குற்றத்திற்காக பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவு 3(2)(va)-ன் கீழான குற்றச்சாட்டு. |

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:11 +0530

| | | |
|---|---|---|
| **7 வது குற்றச்சாட்டு** | : | எதிரி புகார்தாரரின் மனைவியைப் பார்த்து பொது இடத்தில் பெண் என்றும் பாராமல் அவருக்கு அவமானத்தையும், அச்சத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்திய குற்றத்திற்காக பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம்–ன் கீழான குற்றச்சாட்டு. |
| **எதிரியின் பதில்** | : | குற்றவாளி அல்ல |
| **நீதிபதியின் தீர்மானம** | : | குற்றவாளி அல்ல |
| **தீர்ப்பின் முடிவு** | : | இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணம்), 506(i) (2 எண்ணம்), பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவுகள் 3(1)(s), 3(2)(va), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வழக்கில் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்படி எதிரியைக் குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துகள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.<br><br>எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரத்தை ரத்து செய்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 12.03.2026–அன்று என் முன்னர் முடிவான விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவரான அரசு தரப்பில் கற்றறிந்த சிறப்பு அரசு வழக்கறிஞர் திரு.V.T.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.முத்துத்துரைச்சாமி அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதுரைகள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:17 +0530

கேட்கப்பட்டு, முன்னிடப்பட்ட சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

**குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் புகார்தாரரான செல்வக்குமார், இராமநாதபுரம் மாவட்டம், கோவிந்தமங்களம் கிராமத்தில் வசித்து வரும் இந்து பள்ளன் வகுப்பை சார்ந்தவர். எதிரி கோவிந்தமங்களம் கிராமத்தில் வசித்து வரும் பிற்படுத்தப்பட்ட இந்து மறவர் வகுப்பைச் சார்ந்தவர். இவ்வழக்கின் புகார்தாரரிடம் எதிரி பெருமாள் பிரச்சனை செய்ததால், கடந்த 28.03.2019 ம் தேதி சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் புகார்தாரர், எதிரி பெருமாள் மீது புகார் கொடுத்து குற்ற எண்.59/2019 பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் எதிரியான பெருமாள் நீதிமன்ற பிணையில் வெளியில் வந்துள்ளதாகவும், அதை மனதில் வைத்துக் கொண்டு புகார்தாரர் மீது விரோதம் கொண்டு 28.06.2019 ம் தேதி மாலை 17.45 மணிக்கு புகார்தாரர் சாட்சி 3 வீரமுத்து, சாட்சி 4 குப்பமுத்து, சாட்சி 5, குப்பு ஆகியோர்கள் கோவிந்தமங்களம் காலணி பேருந்து நிலையத்தில் உட்கார்ந்திருக்கும்போது, அந்த இடத்திற்கு எதிரி பெருமாள் குடிபோதையில் அவருடன் மூலவயல் காலனியைச் சேர்ந்த அழகர் என்பவரும் குடிபோதையில் வந்து, அழகர் என்பவர் சாட்சி 3 வீரமுத்துவைப் பார்த்து "நீ என்ன பெரிய ஆளா உன் இஷ்டத்திற்கு இடத்தை வித்து செலவு பண்ற" என வீண் வம்பு செய்துள்ளதாகவும், அழகருடன் வந்த எதிரி பெருமாள் அப்போது செம்மறி ஆட்டுக்ளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டு தன் வீட்டிற்கு ஓடி வந்த சாட்சி 6 வீரையா என்பவரைப் பார்த்து "நீ இனிமேல் என் ஏரியா பக்கம் உன் செம்மறி ஆடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிட்டு வந்து தண்ணிக்கு காட்டினீன்னா செம்மறி ஆட்டின் தோலையும் உரிச்சு உன் தோளையும் உரிச்சிடுவேன்" என்று

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:22 +0530

மிரட்டியுள்ளதாகவும், உடனே சாட்சி 6 வீரையா என்பவர் தன்னிடம் எதிரி பெருமாள் வீண் வம்பு இழுப்பதை பார்த்துவிட்டு எதுவும் செல்லமுடியாமல், ஊர் பெரியோர்களிடம் சொல்லுவதற்கு சென்றுவிட்டதாகவும், பின்பு சாட்சி 4 குப்பமுத்து என்பவர் சாட்சி 3 வீரமுத்து மற்றும் அழகர் இருவரையும் "தேவையில்லாமல் பேசி பிரச்சனை செய்யாதீர்கள், அவரவர் வீட்டிற்கு செல்லுங்கள்" என்று சொன்னவுடன் அழகன் உடனே அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், பின்பு சாட்சி 4 குப்பமுத்துவும் அவரது வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், அதன்பின்பு கோவிந்தமங்களம் காலணி பஸ் ஸ்டாப்பில் உட்கார்ந்திருந்த புகார்தாரர், அங்கு உட்கார்ந்து இருந்த சாட்சி 3 வீரமுத்து மற்றும் சாட்சி 5 குப்பு ஆகியோருடன் பேசிக்கொண்டிருந்தபோது எதிரி பெருமாள் புகார்தாரரைப் பார்த்து "ஏண்டா பள்ள தேவடியா மகனே" என்று அசிங்கமாகப் பேசியும், ஏற்கனவே, "போலிஸ் ஸ்டேசனில் என்மீது கேஸ் போட்டு என்ன ஊம்பிப்புட்ட, புடுங்கிப்புட்ட, உன்னைய என்ன பன்றேன்னு பாரு நீ திருட்டு மண் அடிக்கிற தாயோழி என்னைக்காவது மாட்டுவ பாரு, உன்னையும், உன் குடும்பத்தையும் ஒழிக்காமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் விடுத்தும், 28.06.2019 ம் தேதி இரவு 7.30 மணிக்கு மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் எதிரி புகார்தாரரின் மனைவி தமயந்தி மற்றும் அவரது மகள் ஹாசினி இருவரும் தேவகோட்டை டிபிரிட்டோ பள்ளியில் படிக்கும் தனது மகன் ஆதவன் சனி, ஞாயிறு விடுமுறைக்கு வீட்டிற்கு பஸ்ஸில் வருபவனை அழைத்து வருவதற்காக கோவிந்தமங்களம் காலனி பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டு "என் குடும்பத்தை வாழ விடமாட்டேன்கிறாங்க, நாங்க எப்படி இந்த ஊரில வாழ்றது" என்று புலம்பிக் கொண்டிருந்தபோது அதே இடத்தில் நின்று கொண்டிருந்த எதிரி பெருமாள் வந்து புகார்தாரரின் மனைவியான சாட்சி 2 தமயந்தியைப் பார்த்து "ஏண்டி அவுசாரி முண்டே" என்று அசிங்கமாகப் பேசியும், எதிரி புகார்தாரின் மனைவியைப் பார்த்து "உன் புருஷன் என் மேல் கேஸ் கொடுத்து என்ன கிழிச்சு விட்டான், ஊரைவிட்டு ஓடிப்போய்விடுங்கடி" இவ்வழக்கின் எதிரி புகார்தாரரின்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:27 +0530

மனைவியான சாட்சி 2 தமயந்தியை குடிபோதையில் பொது இடத்தில் வைத்து ஆபாசமான வார்த்தைகளால் பேசியும், கொலை மிரட்டல் விடுத்தும் அவரைவிரட்டிச் சென்று அடிக்க முற்பட்டு பொது இடத்தில் அவருக்கு அவமானத்தையும், அச்சத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளதாக கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் புலன்விசாரணை மேற்கொண்டு திருவாடானை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளார். எனவே, எதிரியின் இத்தகைய குற்றச் செய்கைகளானது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 506(i) பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்புச்) சட்டம், பிரிவுகள் 3(1)(r), 3(2)(va) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்று திருவாடானை காவல் நிலையத்திற்காக, திருவாடானை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** பின்னர், எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையான நிலையில், அவருக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. அதன் பின்னர் எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனைய முதல்நிலை நோக்கு காணப்பட்டதால், எதிரி மீது இதச பிரிவுகள் 294(b) (2 எண்ணம்), 506(i) (2 எண்ணம்), பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவுகள் 3(1)(s), 3(2)(va), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டு தமிழில் விளக்கி வினவியபோது எதிரி குற்றச்சாட்டுக்களைப் பொய் என மறுத்தார்.

**3.** அதன் பிறகு இவ்வழக்கில் எதிரி மீதான குற்றச்சாட்டைப் பொறுத்து அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு,

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:32 +0530

அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

4. <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு :–</u>

(i) அ.சா.1 திரு.செல்வக்குமார் தனது சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 28.06.19 மாலை 5.45 மணியளவில் பெருமாள் என்பவரும் அழகர் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், அப்போது அழகர் என்பவர் வீரமுத்து என்பரை பேசியதாகவும், இடத்தை விற்று என்னடா சாப்பிடுகிறாய் என்று அழகர் சொன்னதாகவும், அப்போது அழகர் சென்றுவிட்டதாகவும், பெருமாள் என்பவர் ஆட்டுக்கார் வீரையாவைப் பார்த்து நீயும் உன் ஆடும் எங்கள் ஊரணிக்கு தண்ணி குடிக்க வந்தால் உன்னையும் உன் ஆட்டையும் தோலை உரித்து விடுவேன் என்று திட்டியதாகவும், தான் பஸ் ஸ்டாப்பில் அழகர் மகன் வீரமுத்து, பிச்சை மகன் குப்பமுத்து, உலகு மகன் குப்பு உட்கார்ந்திருந்தோம் என்றும், அப்போது முருகன் மகன் பெருமாள் வந்து என்னைப் பார்த்து பள்ளத் தேவிடியா மகனே என்று கேட்டதாகவும், முதலில் வழக்கு கொடுத்து சுன்னியை ஊம்பியிருவாயா, கிழிச்சிருவாயா உன்னையும் உன் குடும்பத்தையும் ஒழிக்காமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அதோடு தான் சென்றுவிட்டதாகவும், அன்றே தன் மனைவி தன் மகன் டீ, பிரிட்டோ பள்ளியில் படித்து வருகிறதாகவும், தன் மகள் ஆசனி தன் மனைவி தமையந்தி இரண்டு பேரிடமும் தன்னைப் பற்றி பெருமாள் பேசினார் என்று சொன்னேன் என்றும், அன்று இரவு 7.30 மணிக்கு தன் மனைவியும் தன் மகளும் பஸ்ஸ்டாப்பிற்கு எனது மகனை அழைக்க சென்றபோது தன் மனைவியை தேவடியா அவசாரி முன்டை" என்று பேசியதாகவும், பல வார்த்தைகள் பேசியதாகவும், அதன் பிறகு தன் மனைவி ஹலோ போலிசுக்கு போன் செய்து 10.30 மணிக்கு போலிசார் விசாரணை செய்து சென்றுவிட்டார்கள் என்றும், 29.06.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:37 +0530

புகார் மனு கொடுத்ததாகவும், அந்த புகாரில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அது அ.சா.ஆ.1 ஆகும் என்றும், தன்னை போலிசார் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திருமதி.தமயந்தி, தனது சாட்சியத்தில் தான் கோவிந்தமங்களம் கிராமத்தில் குடியிருந்து வருகிறதாகவும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 28.06.19 இரவு சுமார் 7.30 மணிக்கு முருகன் மகன் பெருமாள் என்பவர் தன்னுடன் வம்பிழுத்ததாகவும், தன்னைப் பார்த்து அடியே தேவிடியா மகளே பள்ளத் தேவிடியா மகளே என்று திட்டி, உன்னையும் உன் கணவரையும் இந்த ஊரைவிட்டு விரட்டவேண்டும் என்றும், உன்னையும் உன் குடும்பத்தையும் ஊரைவிட்டு விரட்டவேண்டும் என்று சொன்னதாகவும், அதன் பிறகு கண்ணன் மனைவி கயல்விழி என்பவர் என்டா இந்த புள்ளைய பேசுகிறாய், இப்பத்தான் இவ புருஷனோட மல்லுக்கட்டினாய், அவர் மகனைத் தான் கூப்பிட வந்திருக்கிறாள், ஜாதியைப் பற்றி பேசாதேடா இது நல்லது கிடையாது என்றும், தன்னை அவமானப் படுத்தி அசிங்க அசிங்கமா பேசியதாகவும், அதனால் அவமானம் தாங்கமுடியாமல் ஹலோ போலிசுக்கு போன் செய்ததாகவும், ஹலோ போலிஸ் தனது வீட்டில் விசாரணை செய்தார்கள் என்றும், தான் நடந்த விசயங்களை போலிசாரிடம் சொன்னதாகவும், மறுநாள் காலையில் 29.06.2019 தன் கணவர் திருவாடானை போலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னை போலிசார் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(iii) அ.சா.3 திரு.சின்னதம்பி தனது சாட்சியத்தில் திருவாடனையிலிருந்த டி.எஸ்.பி அங்கு வந்ததாகவும், முதல் நாள் நடந்த பிரச்சனை பற்றி விசாரித்து பஸ் ஸ்டாப் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்ததாகவும், பிறகு விசாரித்துவிட்டு தங்களிடம் கையெழுத்து வாங்கியதாகவும், அவர் அங்கு வந்து விசாரித்தற்கு கையெழுத்து வாங்கியதாகவும், தன்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் முதலாவதாக இருப்பது தன் கையெழுத்து அதற்கு மேலே இருப்பது

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:42 +0530

நாகநாதன் கையெழுத்து என்றும், பார்வை மகஜரில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ.2/அ.சா.3 என்றும், அதேபோல் இது சம்பந்தமாக டி.எஸ்.பி தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(iv) அ.சா.4 திரு.வீரையா, அ.சா.5 திருமதி.கயல்விழி, அ.சா.6 திரு.நாகநாதன் மற்றும் அ.சா.8 திரு.வீரமுத்து ஆகியோர்கள் தங்களது சாட்சியங்களில் புகார் சம்பந்தமாக தன்னை திருவாடனை போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், டிஎஸ்பி தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(v) அ.சா.7 திரு.அரவிந்தராஜன், காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில் 30.06.2019ம் தேதி மதியம் 1.30மணியளவில் தான் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது நிலையத்தில் கடந்த 29.06.2019ம் தேதி ஆர்.எஸ் மங்களம் தாலுகா கோவிந்தமங்களம் கிராமத்தை சேர்ந்த சின்னையா மகன் செல்வகுமார் என்பவர் காலை 10.30மணியளவில் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையத்தில் அப்போது பொறுப்பில் இருந்த பெண் தலைமை காவலர் திருமதி.விஜி கொடுத்திருந்த மனு ரசீதை பார்வையிட்டு புகாரின் தன்மைக்கேற்ப நிலைய கு.எண். 127/2019 சட்டப்பிரிவுகள் 294(b), 506(i) IPC and sec 3(1)(r), 3(1)(s) of SC/ST (POA) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** என்றும், முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவின் அசலை திருவாடானை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், மற்ற நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்ததாகவும், இதுசம்பந்தமாக திருவாடானை உட்கோட்ட காவல்துணைக் கண்காணிப்பாளர் தன்னை விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.9 திரு.சீனிவாசன், காவல் துணைக் கண்காணிப்பாளர் தனது சாட்சியத்தில், கடந்த 30.06.2019ம் தேதி திருவாடானை காவல்நிலைய

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:48 +0530

கு.எண்.127/2019 வழக்கை புலன் விசாரணை மேற்கொள்ள காவல் கண்காணிப்பாளர் தனது செயல்முறை ஆணை எண் C.No. 20/SJ&HR/RMD/2019, Dated: 30.06.2019–ன் கீழ் உத்தரவு பிறப்பித்ததாகவும், அந்த உத்தரவு **அ.சா.ஆ.5** என்றும், காவல் துணைக் கண்காணிப்பாளர் புகழேந்தி கணேஷ் அதே தினம் 15.30 மணிக்கு சம்பவ இடமான கோவிந்தமங்கலம் பஸ் ஸ்டாப் சென்று சாட்சிகள் நாகநாதன், சின்னத்தம்பி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றுள்ளதாகவும், பார்வை மகசர் **அ.சா.ஆ.6** என்றும், வரைபடம் **அ.சாஆ.7** என்று சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.9 மேலும் தனது சாட்சியத்தில் பின்பு அதே தினம் சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி, வீரமுத்து, வீரய்யா, குப்பமுத்து, கயல்விழி, குப்பு மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான நாகநாதன், சின்னத்தம்பி ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலங்களை தனித்தனியாக பதிவு செய்துள்ளதாகவும், 02.07.2019 ம் தேதி வழக்கின் வாதி மற்றும் எதிரிக்கு சாதி சான்று கோரி திருவாடானை வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து 10.07.2019 ம் தேதி 15.30 மணிக்கு சின்னகீரமங்கலம் பஸ்ஸ்டாப் எதிரே நின்றிருந்த எதிரி பெருமாளை காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், 11.07.2019 ம் தேதி சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி ஆகியோர்கள் மற்றும் புகார் மனுவை பெற்று மனு ரசீது வழங்கிய பெண் தலைமை காவலர் விஜி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், 11.07.2019 ம் தேதி சாட்சிகள் செல்வகுமார், தமயந்தி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பெண்கள் வன்கொடுமைகள் தடுப்பு சட்டம் பிரிவு 4 ஐ சேர்த்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும், அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சாஆ.8** என்று சாட்சியமளித்துள்ளார்.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:53 +0530

(viii) அ.சா.9 மேலும் தனது சாட்சியத்தில் 26.08.2019 ம் தேதி புகார்தாரருக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய திருவாடானை வட்டாட்சியர் திருமதி.சாந்தி அவர்களையும், எதிரி பெருமாளுக்கு சாதிச்சான்றிதழ் வழங்கிய திருவாடானை துணை வட்டாட்சியர் திருமதி.பிரேமா அவர்களையும் விசாரித்து சாதிச்சான்றிதழ்கள் பெற்று அவர்களின் வாக்குமுலங்களை பதிவு செய்துள்ளதாகவும், புகார்தாரருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று **அ.சா.ஆ.9** என்றும், எதிரிக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று **அ.சா.ஆ.10** என்றும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் அரவிந்த ராஜன் அவர்களை 26.08.2019 ம் தேதி விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்து விசாரணையை முடித்து 26.08.2019 ம் தேதி எதிரி பெருமாள் மீது இதச பிரிவுகள் 294(b), 506(i) IPC and sec 4of TNPWH Act and sec 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (POA) Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**5.** அ.சா.9 உடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

**6.** அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் குவிமுச 313(1)(b) பிரிவின் கீழ் எதிரியிடம் வினவியபோது எதிரி மேற்படி அரசு தரப்பு சாட்சிகள் பொய்யான சாட்சிகள் அளித்துள்ளதாகவும் பொய்வழக்கு என்றும் எதிரி தரப்பில் சாட்சி இல்லை என்றும் தெரிவித்தார்.

**7.** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**8.** இவ்வழக்கில் புகார்மனு கொடுத்த செல்வக்குமார் அரசு தரப்பு சாட்சி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 செல்வக்குமார் தனது சாட்சியத்தில் இந்து பள்ளன் சமூகத்தைச் சேர்ந்தவர் என்று சாட்சியமளித்துள்ளார். எதிரி பிற்படுத்த இந்து மறவர் வகுப்பை சேர்ந்தவர். புகார்தாரரான அ.சா.1 செல்வக்குமார்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:48:58 +0530

மற்றும் எதிரியின் சாதிகுறித்து எதிரி மறுக்கவில்லை. அ.சா.ஆ.9 மற்றும் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சாதிச்சான்று குறித்த அறிக்கையைப் பரிசிலிக்கையில் அரசு தரப்பில் கூறும், காயம்பட்ட நபரான செல்வக்குமார் இந்து பள்ளன் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும், எதிரி பிற்படுத்தப்பட்ட இந்து மறவர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளதால் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழான வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் இவ்வழக்கை விசாரிக்க அதிகாரம் உள்ளது என முடிவு செய்கிறது.

9. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

எதிரிக்கு எதிராக அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுந்த சாட்சியங்களின் மூலம் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்?

<u>தீர்வு –</u>

**10.** அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிக்க மொத்தம் 9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். இவ்வழக்கில் புகார் கொடுத்த புகார்தாரர் செல்வக்குமார் என்பவரை அ.சா.1 ஆகவும், அவர் மூலம் புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1–ன் மனைவியான தமயந்தி அ.சா.2 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகளான வீரய்யா அ.சா.4 ஆகவும், கயல்விழி அ.சா.5 ஆகவும், வீரமுத்து அ.சா.8 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். புலன்விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று பார்வை மகசர் தயார் செய்தபோது அதற்கு சாட்சியாக கையெழுத்திட்டதாக கூறப்படும் சாட்சியான சின்னதம்பி அ.சா.3 ஆகவும், அவர் மூலம் பார்வை மகசரில் அ.சா.3 ன் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மற்றொரு சாட்சியான நாகநாதன் முனியசாமி அ.சா.6

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:02 +0530

ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**11.** அ.சா.1 செல்வக்குமார் கொடுத்த புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்த திருவாடானை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.அரவிந்தராஜன் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. புலன்விசாரணை அதிகாரி திரு.புகழேந்தி கணேஷ் என்பவருக்குப் பதிலாக தற்போதைய திருவாடானை உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.சீனிவாசன் அ.சா.9 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை, பார்வைமகசர், வரைபடம், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை, புகார்தாரரின் சாதிச்சான்று, எதிரியின் சாதிச்சான்று ஆகியவைகள் முறையே அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12.** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கையில், அ.சா.1 செல்வக்குமார் (புகார்தாரர்) தன்னுடைய சாட்சியத்தில் எதிரியை தனக்கு தெரியும் என்றும், கடந்த 28.06.19 மாலை 5.45 மணியளவில் பெருமாள் என்பவரும் அழகர் என்பவரும் இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள் என்றும், அப்போது அழகர் என்பவர் வீரமுத்து என்பரை பேசியதாகவும், இடத்தை விற்று என்னடா சாப்பிடுகிறாய் என்று அழகர் சொன்னதாகவும், அப்போது அழகர் சென்றுவிட்டதாகவும், பெருமாள் என்பவர் ஆட்டுக்கார் வீரையாவைப் பார்த்து "நீயும் உன் ஆடும் எங்கள் ஊரணிக்கு தண்ணி குடிக்க வந்தால் உன்னையும் உன் ஆட்டையும் தோலை உரித்து விடுவேன்" என்று திட்டியதாகவும், தான் பஸ் ஸ்டாப்பில் அழகர் மகன் வீரமுத்து, பிச்சை மகன் குப்பமுத்து, உலகு மகன் குப்பு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:08 +0530

உட்கார்ந்திருந்தோம் என்றும், அப்போது முருகன் மகன் பெருமாள் வந்து "என்னைப் பார்த்து பள்ளத் தேவிடியா மகனே" என்று கேட்டதாகவும், முதலில் வழக்கு கொடுத்து சுன்னியை ஊம்பியிருவாயா, கிழிச்சிருவாயா உன்னையும் உன் குடும்பத்தையும் ஒழிக்காமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், தன் மனைவி தமையந்தி இரண்டு பேரிடமும் தன்னைப் பற்றி பெருமாள் பேசினார் என்று சொன்னேன் என்றும், அன்று இரவு 7.30 அதன் பிறகு தன் மனைவி ஹலோ போலிசுக்கு போன் செய்து 10.30 மணிக்கு போலிசார் விசாரணை செய்து சென்றுவிட்டார்கள் என்றும், 29.06.2019 ம் தேதி காலை 10.00 மணிக்கு புகார் மனு கொடுத்தேன் என கூறிவிட்டு எதிரி தரப்பில் அ.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்கையில் போலிசார் தன்னிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்றும், கையெழுத்து செய்யவில்லை என்றும், தனக்கு எதுவும் தெரியாது என்றும், முதல் விசாரணையில் சாதிப்பெயரைச் சொல்லி பேசியதாக போலிசார் சொன்னதன்பேரில் கையெழுத்திட்டதாக என்று சொன்னால் சரிதான் என்றும், வழக்கு சம்பந்தமாக தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.** அதேபோல் அ.சா.2 தமயந்தியும் போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில்தான் எதிரி தன் கணவரை சாதியைச் சொல்லி அசிங்கமாக திட்டினார் என முதல் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான் என்றும், தன் கணவர் புகார் கொடுத்த விவரம் தனக்கு தெரியாது என குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். சம்பவத்தை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் சாட்சிகளான வீரய்யா அ.சா.4,கயல்விழி அ.சா.5, வீரமுத்து அ.சா.8 ஆகியோர்கள் வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், டிஎஸ்பி தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளனர். அதேபோல் விசாரணை அதிகாரி சம்பவ இடம் சென்று பார்வை மகசர் தயார் செய்தபோது அதற்கு சாட்சியாக

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:15 +0530

கையெழுத்திட்டதாக கூறப்படும் சாட்சியான சின்னதம்பி அ.சா.3 தனது சாட்சியத்தில் 30.06.2019 ம் தேதி மாலை 03.30 மணியளவில் கோவிந்தமங்களம் காலணி பஸ் ஸ்டாப்பில் தானும், நாகநாதன் என்பவரும் நின்றுகொண்டிருந்தபோது டிஎஸ்பி அங்கு வந்தார் என்றும், நடந்த பிரச்சனை பற்றி விசாரித்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு தன்னிடம் கையெழுத்து வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அதற்கு முரணாக பார்வை மகசரில் கையெழுத்திட்டதாகக் கூறப்படும் மற்றொரு சாட்சியான அ.சா.6 நாகநாதன் தன்னுடைய சாட்சியத்தில் சுமார் 3 வருடத்திற்கு முன்பு திருவாடானை காவல் நிலையத்திற்கு தங்கள் ஊர் கோவிலில் நாடகம் நடத்துவது சம்பந்தமாக அனுமதி கேட்பதற்கு சென்றிருந்தபோது போலிசார் தன்னிடம் ஒரு பேப்பரில் கையெழுத்து வாங்கிகொண்டார்கள் என்றும் என சாட்சியம் அளித்துள்ளார்.

**14.** அ.சா.1, அ.சா2 சாட்சிகள் தங்களது முதன்மை விசாரணையில் கூறியுள்ளதை உறுதிப்படுத்தி குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்காத நிலையில், சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறப்படும் சாட்சிகள் தங்களது முதன்மை விசாரணையில் அ.சா.1, அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்களை உறுதிப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. விசாரணை அதிகாரியின் சாட்சியத்திலிருந்து அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் முதலில் உண்மையை கூறிவிட்டு பின்னிட்டு எதிரியிடம் சமாதானம் செய்து கொண்டு முதன்மை விசாரணையில் கூறியுள்ளதற்கு மாறாக சாட்சியம் அளித்துள்ளார்கள் என குறுக்குவிசாரணை மூலம் எவ்வித பதில்களையும் வெளிக்கொணரவில்லை, அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் புலன்விசாரணை அதிகாரியிடம் கூறியுள்ளதுபோல் இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. எதிரி என்ன காரணத்திற்காக அ.சா.1 மற்றும் அவரது மனைவியான அ.சா.2 தமயந்தியை சாதி குறித்து அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள் என சாட்சியம் அளிக்கவில்லை. தனக்கும் எதிரிக்கும் முன்விரோதம் இருந்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. அவ்வாறு சம்பவத்தை நேரில்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:19 +0530

பார்த்ததாகக் கூறப்படும் சாட்சியான வீரமுத்து அ.சா.1—ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ஆதரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றம் கவனத்திற்கொண்டு பரிசீலிக்கும்போது அ.சா.1, அ.சா.2 சாட்சிகள் நிலையாக சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், அவர்களது சாட்சியத்தை உறுதிப்படுத்தி இதர சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், அ.சா.1, அ.சா.2 சாட்சிகளின் சாட்சியங்கள் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதால் அவர்களது சாட்சியத்தின் அடிப்படையில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டது என்ற முடிவுக்கு வருவதற்கு எவ்வித தயக்கமும் இடர்பாடும் இந்நீதிமன்றத்தில் எழவில்லை. அரசு தரப்பு எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறிவிட்டதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கவேண்டியது நியாயமாகவும் அவசியமாகவும் இருக்கிறது.

**15.** எனவே, இவ்வழக்கின் எழுந்துள்ள முரண்பாடுகள் மற்றும் சந்தேகங்களையும் அரசு தரப்பு விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களையும் பரிசீலிக்கும்போது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தும் வகையில் இல்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரி மீது இதச பிரிவுகள் 294(b)(2 எண்ணம்), 506(i) (2 எண்ணம்), பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவுகள் 3(1)(s), 3(2)(va), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகமற விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**16.** இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 294(b)(2 எண்ணம்), 506(i) (2 எண்ணம்), பட்டிலியனத்தவர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் 2015, பிரிவுகள் 3(1)(s), 3(2)(va), பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள்

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:25 +0530

வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் இவ்வழக்கில் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மேற்படி எதிரியைக் குவிமுச பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

எதிரி எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்களை ரத்து செய்தும் இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:30 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம் (மு.கூ.பொ.)

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.செல்வக்குமார் |
| அ.சா.2 | திருமதி.தமயந்தி |
| அ.சா.3 | திரு.சின்னதம்பி |
| அ.சா.4 | திரு.வீரையா |
| அ.சா.5 | திருமதி.கயல்விழி |
| அ.சா.6 | திரு.நாகநாதன் |
| அ.சா.7 | திரு.அரவிந்தராஜன், காவல் ஆய்வாளர் |

அ.சா.8 திரு.வீரமுத்து

அ.சா.9 திரு.சீனிவாசன், காவல் துணைக் கண்காணிப்பாளர்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.06.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 30.06.2019 | பார்வை மகஜரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 30.06.2019 | பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள அ.சா.6 ன் கையொப்பம் |
| அ.சா.ஆ.4 | 30.06.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 30.06.2019 | காவல் கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை |
| அ.சா.ஆ.6 | 30.06.2019 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | 30.06.2019 | வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 11.07.2019 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.9 | 24.08.2019 | புகார்தாரருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று |
| அ.சா.ஆ.10 | 26.08.2019 | எதிரிக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்று |

<u>சான்று பொருள்</u> : இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.03.16 17:49:37 +0530

அமர்வு நீதிபதி,
பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர்
(வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட சிறப்பு நீதிமன்றம்,
இராமநாதபுரம் (மு.கூ.பொ.)